**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 11 of 2015**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : சின்னசாமி** | **Father/Husband's Name: ராமசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 05.07.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்பத்திநாலு புதூரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பாக இரவு 10 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி தகாத வார்த்தையால் கொத்தா, கோம்மா என்று பேசினார். நான் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு என்னை கீழே தூக்கி போட்டு கையில் வைத்திருந்த அருவாமனையால் எனது இடது கை நடுவிரலை அறுத்துவிட்டார். அதில் எனக்கு இரத்தகாயம் ஆனது. அருகில் இருந்தவர்கள் வந்தார்கள். பிறகு என் மகன் மாயவன் வந்து பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.07.05 18:47:44 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 11 of 2015**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : அய்யப்பன்** | **Father/Husband's Name: தர்மராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 05.07.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்பத்திநாலு புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் மில் வேலைக்கு சென்று வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு மாமா ஆவார். அ.சா.1 சின்னசாமி எனக்கு தாத்தா முறையாவார். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பாக இரவு சுமார் 9.30 முதல் 10 மணியளவில் அ.சா.1 வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி மது அருந்தி விட்டு தகாத வார்த்தையால் பேசிய போது பெண்கள் இருக்கும் இடத்தில் எதற்காக இப்படி பேசுகிறாய் என்று தாத்தா ஆஜர் எதிரியிடம் கேட்ட போது கையில் வைத்திருந்த அரிவாள்மனையால் இடது கை நடுவிரல் மற்றும் வலது கை மணிக்கட்டில் வெட்டினார். அதில் அ.சா.1 யிற்கு காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. சண்டையை நான், இராமசாமி, சதிஷ்குமார் தடுத்து தாத்தாவை வீட்டிற்கு கூட்டி வந்து எனது மாமா மாயவனுக்கு போன் செய்து அவர் வந்து என் தாத்தாவை பழனி அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.07.05 18:47:53 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 11 of 2015**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : ராமசாமி** | **Father/Husband's Name: கிட்டப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 05.07.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்பத்திநாலு புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1 வீட்டில் இருந்த போது சத்தம் கேட்டு நான் சென்று பார்த்த போது ஆஜர் எதிரி அரிவாமனையால் அ.சா.1 யை இடது கை நடுவிரலில் இரத்தக்காயம் இருந்தது. வலது கை மணிக்கட்டில் இரத்தக்காயம் இருந்தது. அதைப்பார்த்து நான் அ.சா.1 மகன் மாயவனிடம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு சொன்னேன். ஆஜர் எதிரி ராமசாமி கொத்தா, கோம்மா என்ற தகாத வார்த்தையால் பேசிய சத்தம் கேட்டது. நான் வந்து பார்க்கையில் மேற்கண்ட சம்பவங்கள் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.07.05 18:48:02 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 11 of 2015**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : வெங்கடாசலம்** | **Father/Husband's Name: பரமசிவம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 05.07.2022**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்பத்திநாலு புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு பெரியப்பா , அ.சா.2 எனது அக்கா மகன், ஆஜர் எதிரி எனக்கு பங்காளி முறை. 18.11.2014 ம் தேதி இரவு 10 மணியளவில் ஒரு இடம் சம்பந்தமாக அ.சா.1 மற்றும் எதிரிக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது. அதில் எதிரி அ.சா.1 யை பார்த்து ஆஜர் எதிரி கொத்தா, கோம்மா என்ற தகாத வார்த்தையால் பேசினார். அதற்கு அ.சா.1 ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கையில் வைத்திருந்த அரிவாமனையால் அ.சா.1 ன் இடது கை நடுவிரலில் வெட்டினார். வலது கை மணிக்கட்டில் வெட்டினார். இரத்தகாயம் ஏற்பட்டது. காயம்பட்ட அ.சா.1 யை நானும், அவர் மகன் மாயவன் சிகிச்சைக்காக பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.07.05 18:48:16 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 11 of 2015**

**Deposition of Witness P. W.5**

| | |
|---|---|
| **Name : மாயவன்** | **Father/Husband's Name: சின்னசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 05.07.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்பத்திநாலு புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் பஸ் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான நபர்களை தெரியும். நாங்கள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரி எனக்கு பங்காளி முறை. சுமார் 7 வருடத்திற்கு முன்பு ஒரு இடம் சம்பந்தமாக அ.சா.1 எனது அப்பாவுக்கும், ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்தது. நவம்பர் மாதம் 2014 ம் ஆண்டில் இரவு சுமார் 10.45, 11 மணியளவில் எனக்கு அய்யப்பன் மற்றும் வெங்கடாசலத்திடமிருந்து அ.சா.1 யை எதிரி வெட்டி காயம் ஏற்படுத்தி விட்டதாக சொல்லி போன் வந்தது. அதன் பேரில் நான் பழனியிலிருந்து ஆட்டோ எடுத்து சென்று அங்கு போய் பார்த்த போது அ.சா.1 ன் இடது கை நடுவிரலில் இரத்தகாயம் இருந்தது. மேலும், வலது கையில் மணிக்கட்டு பகுதியில் காயம் இருந்தது. அதன் பிறகு அ.சா.1 யை பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.07.05 18:48:26 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.